©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price : Rs. 8.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 46] CHENNAI, WEDNESDAY, NOVEMBER 24, 2010
Karthigai 8, Thiruvalluvar Aandu–2041

# Part VI—Section 2

## Notifications of interest to a section of the public issued by Heads of Departments, etc.

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

CONTENTS

| | Pages. |
|---|---|
| TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION, CHENNAI | |
| Electricity Act—Tamil Nadu Electricity Supply (Amendment) Code 2010 .. .. | 490-491 |
| GOVERNMENT EXAMINATIONS / EDUCATIONAL OFFICERS | |
| Loss of Certificates .. .. .. .. | 491-509 |

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

(அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ/SC/7– 21, 25–10–2010 நாளிட்டது )

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பினைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அதனை அறிவிக்கை செய்துள்ளது என்பதாலும்,

மற்றும், தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிற்கு ஒருசில திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அத்தகைய திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 50ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம் (இதன் பின்பு இதில் முதன்மை விதித் தொகுப்பு என்று குறிப்பிடப்படும்) தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களைக் குறித்துரைத்துள்ளது, அதாவது:–

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

a) இந்த விதித் தொகுப்பு, 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு என்று கூறப்படும்.

b) இது, 01–08–2010இல் இருந்து நடைமுறைக்கு வந்ததாக கருதப்படும். அதாவது, ஆணையத்தின் சில்லறை மின்கட்டண ஆணை எண். 3/2010 நடைமுறைக்கு வந்த நாள் ஆகும்.

**2. முதன்மை விதித் தொகுப்பின் 4ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம் :**

முதன்மை விதித் தொகுப்பின் 4ஆம் ஒழுங்குமுறைவிதியின் **(1)** ஆம் உள்– ஒழுங்குமுறைவிதியில், (iii) ஆம் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது, –

*"(iii)* ***திறன் காரணிக்கான ஊக்கங்குறைப்புத் தொகை***

*மின்நுகர்வோர் ஒவ்வொருவரும் –*

*தாழ்வழுத்த மின் வழங்கலைப் பொருத்தமட்டில், **0.85,** மற்றும் உயர் அழுத்த மின் வழங்கலைப் பொருத்தமட்டில், **0.90,** திறன் காரணியை பராமரித்தல் வேண்டும். பராமரிக்கத் தவறும் நேர்வில், அவர், ஆணையம் அவ்வப்போது விளம்பலாகும் வீதங்களில் ஊக்கங்குறைப்புத் தொகை வாயிலாக நஷ்டஈடு செலுத்துவதற்கு கடப்பாடுடையவராவார்."*

**3. முதன்மை விதித் தொகுப்பின் 5ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம் :**

முதன்மை விதித்தொகுப்பின் 5ஆம் ஒழுங்குமுறைவிதியின் **(1)**ஆம் உள்– ஒழுங்குமுறை விதியின் *(b)* கூறில், முதலாம் வாக்கியத்தில் வரும் "திறன் காரணி ஊக்கமுட்டும், ஊக்கம் குறைப்பு திட்டத்தில் " என்ற சொற்றொடருக்கு பதிலாக, " திறன் காரணி ஊக்கம் குறைப்பு திட்டத்தில் " என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

*(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)*

**(ரா.வெ. ராஜா)**
செயலாளர்